**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10717

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.02.2026

Accepted: 28.03.2026

Published: 01.04.2026

Citation:
Peline, Mahathevan Melin, and Nilanthini Chenthurran. "Tourist Centers in Delft Island: A Historical Study." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 41–51.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10717

*Corresponding Author:
nilanthinic@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tourist Centers in Delft Island: A Historical Study

**Mahathevan Melin Peline**
*Researcher, Department of History, Faculty of Arts and Culture*
*Eastern University, Sri Lanka*

**Nilanthini Chenthurran**
*Senior Lecturer, Department of History, Faculty of Arts and Culture*
*Eastern University, Sri Lanka*
*http://orcid.org/0000-0002-7184-1328*

**Abstract**
*Delft Island (Neduntheevu) stands as a unique tourist destination in Sri Lanka, possessing a rich history characterized by distinct geographical and cultural features. The region is a home to several significant landmarks, including the historic Fort of King Vediyarasan, Chola-era constructions, colonial-period structures, ancient ports, and various places of worship, all of which are complemented by natural attractions, pristine beaches and unique flora. However, despite this potential, Delft Island remains largely unrecognized by the wider public due to a lack of systematic documentation. This study seeks to document these tourist sites and raise awareness by categorizing the island's landmarks into historical, recreational, and religious categories. Based on data gathered through field studies and interviews, the research analyses the current status of these locations and identifies that inadequate transportation and underdeveloped infrastructure are the primary barriers to tourism development. The study concludes that by preserving the island's unique historical heritage and improving basic facilities, it is possible to achieve sustainable economic development and uplift Delft to its rightful status as a global tourist hub.*

***Keywords:*** *Historical Monuments, Tourism, Delft Island, Cultural Features.*

## References

### Books

1. Gugabalan, Ka. (1994). Theevagam Valamum Vazhvum (Theevagam - Wealth and Life). Theevagam Kottam Cooperative Union. Jaffna.
2. Gugabalan, Ka. (2000). Theevagam Palthurai Nokku (Theevagam - A Multi-disciplinary Perspective). Department of Geography. University of Jaffna. Jaffna.
3. Sadhasivam, Se. (1979). Saptha Theevukal (Seven Islands). Asian Press. Chennai.
4. Sivanayagamoorthy, Ka. (2003). Neduntheevy Makkalum Varalagum (People and History of Neduntheevu). Viveka Press, Toronto. Canada
5. Pushparathnam, Pa. (2010). Neduntheevil Surulavirkuriya Tholliyal Sinnangal (Archaeological Monuments Suitable for Tourism in Neduntheevu).Varalaru Ula (Ed.). Natarasa, A.Si. Sivathami Human Dawn Academy.
6. Lakshmanan, Na. (2010). Neduntheevu Sithaiyum Sinnangal (Neduntheevu - Crumbling Monuments). Gangai Printers. Jaffna.

**Interviews**

1. Anton Jayalajreen, Jo. Tourist Guide. Age - 39. Neduntheevu.
2. Kamalavathi, Na. Retired Pre-school Teacher. Age - 85. Neduntheevu.
3. Sujeevan, Jo. Vehicle Driver. Age - 40. Neduntheevu.
4. Daveedu, Je. Ministry of Grace (Church of South India). Age - 51. Jaffna.
5. Daseenthan, Sa. Security Officer, Department of Archaeology. Age - 35. Jaffna.

# நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள சுற்றுலா மையங்கள் – வரலாற்றாய்வு

***மகாதேவன் மேளின் பேழினி***
ஆய்வாளர், வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***நிலாந்தினி செந்தூரன்***
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலைகலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*இலங்கையில் காணப்படும் சுற்றுலா மையங்களில் ஒன்றாக நெடுந்தீவு காணப்படுகின்றது. இது தனித்துவமான புவியியல் மற்றும் பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய வரலாற்றைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். குறிப்பாக வரலாற்றுத் தொன்மை வாய்ந்த வெடியரச மன்னனின் கோட்டை, சோழர்காலக் கட்டுமானம், காலனித்துவ கால கட்டுமானங்கள், துறைமுகங்கள், வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றோடு இயற்கை அழகைக் கொண்ட கடற்கரைகளும், இயற்கைத் தாவரங்களும் சுற்றுலாத்தளத்திற்கு வாய்ப்பான இடங்களாகக் காணப்படுகின்றன. ஆனாலும் இப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறைத் தொடர்பாக தெளிவான ஆவணப்படுத்தல் இன்மையால் மக்களால் பெரிதும் அறியப்படாத இடமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத்தளங்களை ஆவணப்படுத்தி அது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் அவசியமானதாகும். அத்தோடு சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் சவால்களையும்' அதற்குரிய தீர்வாலோசனைகளையும் வழங்குவதனூடாக இத்துறையை விருத்தி செய்யமுடியும். நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை வரலாறு, பொழுதுபோக்கு, வழிபாட்டிடங்கள் என வகைப்படுத்தி ஆராயப்பட்டுள்ளது. இவ்ஆய்வு களஆய்வு, நேர்காணல்கள் மூலம் முன்னெடுத்து பெறப்பட்ட தரவுகளைக்கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு சுற்றுலா மையங்களை விருத்தி செய்வதற்குச் சவாலாக அமையும் விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *வரலாற்றுச் சின்னங்கள், சுற்றுலாத்துறை, நெடுந்தீவுப் பிரதேசம், பண்பாட்டம்சங்கள், இலங்கை*

## ஆய்வின் அறிமுகம்

உலகப் பொருளாதார முன்னேற்றத்தில் வளர்ந்த மற்றும் வளர்முக நாடுகளில் சுற்றுலாத்துறை குறிப்பிடத்தக்க அளவு பங்கினை வகிக்கின்றது. இத்துறையானது அன்னியச் செலாவணிமூலம் அதிகளவு வருமானத்தைப் பெறும் துறையாகவும் விளங்குகின்றது. இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படும் இயற்கை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலா மையங்களைப் பார்வையிடுவதற்கெனப் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இதனால் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் இலங்கையின் சுற்றுலா மையங்களும் விருத்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையின் வடக்குப் பகுதியில் சுற்றுலாத்துறை படிப்படியாக வளர்ச்சி அடைந்து வரும் நிலையில் நெடுந்தீவின் சுற்றுலா மையங்களும் கவனத்தை ஈர்த்து வருகின்றன. எனினும் இப்பிராந்தியத்தின்

சுற்றுலாத் தளங்கள் தொடர்பாக முழுமையான ஆய்வுகள் இடம்பெறவில்லை. இந்நிலையில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள சுற்றுலா மையங்கள் தொடர்பாக ஆராய்ந்து இப்பிராந்தியத்தின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இவ்ஆய்வு அமைகின்றது.

### ஆய்வின் நோக்கம்

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்தி, அவற்றை உரிய முறையில் வகைப்படுத்தி ஆவணப்படுத்தலே ஆய்வின் முதன்மை நோக்கமாக அமைகின்றது.

### ஆய்வுப் பரப்பும் வரையறையும்

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவினை ஆய்வு பிரதேசமாகக்கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இப்பிரதேசத்தில்புராதனகாலம்தொடக்கம் அண்மைக்காலம் வரையான வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் இயற்கையாக அமைந்த சுற்றுலாத் தளங்களின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் என்பன ஆய்வுப் பரப்பும் வரையறையாகவும் அமைகின்றன.

### ஆய்வு முறையியல்


இவ்ஆய்வானது வரலாற்று அணுகுமுறையில் விபரணவியல் ஆய்வாக அமைகின்றது. குறிப்பாக நெடுந்தீவிலுள்ள பிரதான சுற்றுலாமையத் தளங்களை நேர்காணல் மற்றும் களஆய்வுகளை மேற்கொண்டு பெறப்பட்ட தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளையும் பகுப்பாய்வு செய்து வரலாற்று அணுகுமுறையினூடாக முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

### நெடுந்தீவில் உள்ள சுற்றுலாத் தளங்கள்

இலங்கையின் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு வடமேற்கே நெடுந்தீவுப் பிரதேசமானது அமைந்துள்ளது. இத்தீவானது அவுறையூர் தீவு, பால்த்தீவு, தயிர்த்தீவு, அபிசேகத்தீவு, மூலிகைத்தீவு, மருத்துவமாவனம், புட்கரம், டெல்வ்ற் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்படைய குடியேற்றங்கள் இத்தீவிலும் இடம்பெற்றுள்ளன என்பதை அடையாளப்படுத்தும் வகையில் நெடுந்தீவின் வடமேற்கே உள்ள கடற்கரையை அண்டிய வட்டாரத்தில் மட்பாண்ட ஓடுகள், கைவிரல் அடையாளம்கொண்ட கூரை ஓடுகள் முதலானவை கண்டெடுக்கப்பட்டுள்ளன (புஸ்பரட்ணம், 2010:46). நெடுந்தீவின் வரலாறு, அதன் புவியியல் அமைப்பைப் போலவே வரலாற்று ரீதியாக இத்தீவு வெடியரசன், சோழர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், மற்றும் ஆங்கிலேயர் போன்ற ஆட்சியாளர்களின் நிர்வாக மையமாகவும் இருந்துள்ளது. இத்தீவு வெடியரசன் கோட்டை, ஒல்லாந்தர் கோட்டை போன்ற வரலாற்றுச் சின்னங்களைக் கொண்டிருப்பதால், இது ஒரு காலத்தில் தனி இராச்சியமாகவோ அல்லது யாழ்ப்பாண இராச்சியத்தின் முக்கியக் கோட்டைப் பகுதியாகவோ செயற்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நெடுந்தீவானது யாழ்குடா நாட்டின் சப்த தீவுகளில் முக்கியத்துவம் பெற்றதாகவும் வட இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிருவாக வர்த்தக மையமாகவும், அமைவிட காரணிகளாலும், பௌதீக செல்வாக்கினாலும் ஆதிகாலம் தொட்டு இன்று வரை மக்கள் வாழ்ந்து வரும் தீவாகக் காணப்படுகின்றது. இதனால் தான் நெடுந்தீவானது நீண்ட தீவு மட்டுமல்ல அதற்கு ஒரு நீண்ட பாரம்பரிய வரலாற்றையும் கொண்டுள்ளது என்பதனை அங்கு சிதைவுறும் நிலையில் காணப்படும் தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இப்பிரதேசத்தில் சுற்றுலாவினை மேற்கொள்வதற்கு ஏதுவான பல சுற்றுலாத் தளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக வெடியரசன் கோட்டை, இராணிக் கோபுரம், புறாக்கூடு, மீகாமன் கோட்டை, குதிரைலயம், 40அடி மனிதனின் கால்தடம், பெருக்கு மரம், மாவலித்துறை கடற்கரை, பவளக்கடற்கரை, சோழர் காலக் கோயில், புனித லோரான்சியார் ஆலயம், புனித யுவானியார் ஆலயம் என்பன காணப்படுகின்றன. இவற்றை வரலாறுச் சார்பானவை, பொழுதுபோக்குச் சார்பானவை, வழிபாட்டிடங்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.




**படம்: 1 நெடுந்தீவில் உள்ள சுற்றுலாத் தளங்களின் அமைவிடம்**
***(மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது)***

### வரலாறுசார் சுற்றுலாத் தளங்கள்

### வெடியரசன் கோட்டை மற்றும் நெடுந்தீவு போர்த்துக்கேயர் கோட்டை

இது நெடுந்தீவின் மேற்கே கோட்டைக்காடு என்னும் பகுதியில் அமைந்திருந்தது. இங்கிருந்து வெடியரசன் என்னும் மன்னன் தனது ஆட்சி செய்தான். இக்கோட்டை சோழர்காலக் கட்டட முறைப்படியே கட்டப்பட்டிருந்தது. இதன் வடிவமைப்பு பல சித்திரவேலைப்பாடுகளைக் கொண்டு காணப்பட்டிருந்திருக்கலாம் என அதன் சிதைந்த பகுதிகளைக்கொண்டு புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இன்று கோட்டை அழிந்த நிலையில் உள்ளது. இக்கோட்டையை அண்மித்துள்ள பகுதிகளில் மட்பாண்ட ஓடுகள், கூரையோடுகள், வட்டமான நாணயங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு வடகரையில் பிரதான இறங்கு துறைக்கு அருகில் பாழடைந்த ஒரு கோட்டையின் எச்சங்களும் காணப்படுகின்றன. இதனை போர்த்துக்கேய கோட்டையின் பகுதிகள் என்பர். அக்காலம் போர்த்துக்கேயர் கலங்கள் வந்து இறங்கக்கூடிய கடற்கரையில் இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது.

முருகைக்கற்களால் ஆக்கப்பட்ட இக்கோட்டையின் சில சுவர்கள் சான்றாக உள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் இது முக்கியத்துவம் பெறாமையால் பாது காக்கப்படவில்லை. போர்த்துக்கேயரும் நெடுந்தீவின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து நெடுந்தீவின் மேற்கே பெரியதுறை என்னும் துறைமுகத்திற்கண்மையில் ஒரு கோட்டையைக் கட்டி அங்கிருந்து ஆட்சி செய்தனர். இக்கோட்டை இடிந்த நிலையில் மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. இக்கோட்டை பற்றி பாசெற் என்னும் பாதிரியார் இது ஒரு இரண்டு மாடி கட்டடமாக கட்டப்பட்டிருந்தது. இதன் சுவர்கள் மிகவும் அகலமாய் இருந்தன. மேலே இரண்டு அறைகளும் கீழே இரண்டு அறைகளும் இருந்தன. இவற்றுக்கு கீழே ஒரு சுரங்க அறையில் இருந்து மேல் அறைக்கு செல்லக்கூடியதாக இரட்டை சுவர் படி கட்டப்பட்டிருந்தது. அதற்கு வெளிப்புறமாக 4 அடி சதுர ஜன்னல் அமைக்கப்பட்டு இருந்தது. இதன் கூரை தட்டையாக இருந்தது எனவும் கூறியுள்ளார் (சிவநாயகமூர்த்தி, 2003:77).

### ஒல்லாந்தர் கோட்டை / மீகாமன் கோட்டை

இது 300 வருடங்கள் பழமை வாய்ந்த நெடுந்தீவின் கரையோரத்தில் அமைந்துள்ள கோட்டையாகும். பாதுகாப்பு நோக்கத்திற்காக போர்த்துக்கேயரால் உருவாக்கப்பட்ட இவ்வரண் ஒல்லாந்தரால் இரண்டு

கொத்தளங்களை உள்ளடக்கியதாக மாற்றியமைக்கப்பட்டது. இக்கோட்டை நெடுந்தீவின் மத்தியில் தற்போதைய வைத்தியசாலைக்கு அண்மையில் கடற்கரைப் பக்கமாகக் கட்டப்பட்டுள்ளது. இதனுள் சுரங்க அறை ஒன்றும் காணப்படுகிறது. மிகவும் சிறிய இரு அறைகளையும், சுவர் 2.5அடி தடிப்புள்ளதாக காணப்படுகின்றது. இதுவும் இன்று அழிந்த நிலையிலேயே உள்ளது. போர்த்துக்கேயர் நெடுந்தீவின் நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகக் கட்டினார்கள். இதன் சுவர்கள் மிக அகலமானவை. இதன் உள்ளும் புறமும் பல உடைந்த ஒல்லாந்தர் பாவித்த பொருட்களும், செப்பு நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன. இதன் சுவர்கள் இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. இக்கோட்டையின் மாடங்களையும், முகப்புத் தோற்றங்களையும் நோக்கும் போது அவற்றின் மேற்கு பக்க கட்டடத் தொகுதி அவர்களின் நிருவாக மையமாகவும், கடற்கரையை நோக்கிய அதன் கிழக்கு பக்க கட்டடத் தொகுதி கடற்பாதுகாப்பு அரணாகவும் விளங்கியது எனலாம். இக்கோட்டைகள் அனைத்தும் முருகை கற்களையும், சுண்ணாம்புக் கற்களையும் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. ஒல்லாந்தர்களின் போக்குவரத்து, தொழினுட்பத் திறன், படைக் கட்டுமானம், கட்டடக் கலைத்திறன் போன்ற அனைத்தையும் இக்கோட்டை வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது (இலட்சுமணராசா, 2010: 72) தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் இது தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இது ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்தமையை வெளிப்படுத்திக் காட்டும் வரலாற்றுச் சின்னமாகக் காணப்படுவதனால் சுற்றுலாவிற்கு ஏற்ற தளமாகக் காணப்படுகின்றது.

### நெடுந்தீவின் இராணிக் கோபுரம்

இலங்கையில் ஐரோப்பியர்கள் கடற் போக்குவரத்து, பாதுகாப்பு, வர்த்தக நோக்கம் கருதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களில் வெளிச்சவீடுகளை இலங்கையின் பல பகுதிகளிலும் அமைத்தனர். இவற்றில் ஒன்றாக நெடுந்தீவின் தென்மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு காணப்படுகிறது. இன்றும் அழிவடையாது ஒல்லாந்தர்காலத் தொழில் நுட்பத்தைப் பிரதிபலிக்கும் வெளிச்சவீடு குவிந்தா அல்லது குயின்ஸ்ரவர் என அழைக்கப்படுகின்றது. குவிந்தா ஆரம்பத்தில் ஒல்லாந்தரால் சுண்ணாம்பு அல்லது முருகைக்கற்களால் கட்டப்பட்டது. ஒல்லாந்தரின் ஆட்சியின் பின்னர் வருகைதந்த பிரித்தானியரால் இவ்வெளிச்ச வீடு மீண்டும் திருத்தப்பட்டு குயின்ஸ்ரவர் எனப்பெயர் மாற்றப்பட்டது. குவிந்தா பரந்த வெளியில் பகல்நேரத்தில் வெள்ளை நிறமாகக் காணப்பட்டதனால் பரந்த கடற்பரப்பில் தொலைதூரத்தில் வருகின்ற கப்பல்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கியது. இங்கு பல கப்பல்கள் பருவக் காற்றுக்களைப் பயன்படுத்திக் கரை ஒதுங்குவதற்கும், பயணங்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது (குகபாலன், 2000:75).

இவ்வெளிச்சவீட்டின் முக்கிய அம்சம் அல்லது தொழில்நுட்பம் என்னவெனில் அதன் அடிப்பாகத்திலிருந்து நடுவிலுள்ள துளை வழியாகக் கடதாசி போன்ற பாரம் குறைந்த பொருட்களை வீசும்போது அவை காற்றமுத்த அமுக்கவிசையின் காரணமாக குயின்ஸ்ரவரின் மேலே இழுத்துச் செல்லப்படுவதாகும். நெடுந்தீவின் தென்கிழக்கு கரையோரத்தில் முக்கோண வடிவமாகக் கட்டப்பட்ட ஒரு கோபுரமாகக் காணப் படுகின்றது. இக்கோபுர அடியில் மூடப்படும் தீயினால் ஏற்படும் புகை கோபுர உச்சியில் வெளிவரும். இந்த கோபுரத்தின் மத்தியில் புகை செல்லக்கூடிய வகையில் துவாரம் உள்ளது. கடலில் வரும் கலங்களுக்குப் புகை மூலம் இக்கோபுரம்

வழி காண்பிக்கின்றது. இது 5 அடுக்கு கோபுரத் தன்மையுடன் 55 அடி உயரம் கொண்டதாகக் கனசதுர வடிவில் வெட்டப்பட்ட சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டுள்ளமை இதன் சிறப்பமாகும். (சிவநாயகமூர்த்தி, 2003:80). தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் இது தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

## புறாக்கூடு

நெடுந்தீவில் ஒல்லாந்தரது ஆட்சியைச் சிறப்பாக அடையாளப்படுத்தும் ஐரோப்பியர் கால மரபுரிமைச் சின்னங்களில் இன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது பறவைகள் சரணாலயமெனப்படும் புறாக்கூடாகும். ஆதிகாலத்தில் தகவல் தொடர்பாடலுக்குப் புறாக்களும் பயன்படுத்தப்பட்ட வரலாறுகள் உண்டு. எனவே, ஒல்லாந்தரால் கட்டப்பட்ட இதன் கலைமரபையும், தொழில்நுட்ப அறிவையும் நோக்கும் போது இக்கூடு புறாக்கள் வாழ்வதற்கேற்ற வகையில் உள்ளதனால் புறாக்கூடு என அழைக்கப்படுகிறது. இக்கூடு ஏறத்தாழ 15 அடி உயரம் கொண்டது. இக்கட்டடத்தின் மேற்தளத்தில் 80 சிறிய அறைகள் கொண்ட புறாக்கள் அல்லது பறவைகள் வசிப்பதற்குரிய கூடுகள் அல்லது கண்துளைகள் காணப்படுகின்றன. இப்புறாக் கூடானது ஒல்லாந்தராட்சியில் அயல் பிரதேசங்களுடன் தமது இராணுவ, நிர்வாக தேவைகளுக்காக அமைக்கப்பட்ட புறாக்கூடு பின்னர் பிரித்தானியரால் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் இன்று கைவிடப்பட்ட நிலையில் காணப் படுகின்றது. இக்கூடு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த மரபுரிமைச் சின்னமாக காணப்படுகின்றது (இலட்சுமணராசா, 2010: 73).

## பெருக்கு மரம்

இலங்கையின் தொல்லியல் மரபுரிமைகளில் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த மரங்களாகப் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன. இம்மரங்கள் பெரும்பாலும் கோட்டைகள், வணிக நகரங்கள், துறைமுகங்கள், பண்டைய வர்த்த மையங்கள் என்பவற்றை அண்டிய இடங்களில் காணப்படுவதால் அவ்விடங்கள் வரலாற்றுப் பழமை வாய்ந்த பிராந்தியங்கள் என்பதனை அடையாளப்படுத்திக் காட்டுகின்றன. இதனால் பெருக்கு மரமும் அது சார்ந்த சுற்றாடலும் இலங்கையின் முக்கிய தொல்லியல் மரபுரிமை சார்ந்த இடங்களாக பார்க்கப்படுகின்றன. வட இலங்கையில் பெருக்கு மரம் காணப்படும் இடங்களில் நெடுந்தீவிற்கும் தனித்துவமான பராம்பரிய வரலாறு உண்டு. ஒல்லாந்தரால் நெடுந்தீவுக்கு குதிரைகள் கொண்டு வரப்பட்டபோது அக்குதிரைகளின் உணவிற்காக நாட்டப் பட்டது என்றும் கூறப்படுகின்றது. சாதாரணமாக மரத்தைவிடப் பன்மடங்கு பெரிய பரப்பைக் கொண்டது. இங்கு காணப்படும் பெருக்கு மரத்தின் சிறப்பான விடயம் இதன் அடிப்பகுதி ஒருவீடு போன்ற அமைப்பில் ஆறு அல்லது ஏழு நபர்கள் நிற்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. மேலும் இப்பெருக்குமரம் இலங்கை வந்த அரேபியரால் நாட்டப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது (இலட்சுமணராசா, 2010:61). இதனால்தான் 1940ஆம் ஆண்டு 9ஆம் இலக்க தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் இம்மரம் தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## வளரும் கல்

களவாய்வினை மேற்கொண்ட வேளையில் இங்கே காணப்படும் முருகைக் கற்பாறையானது ஏனைய பாறைகளில் இருந்து வித்தியாசமான அமைப்பினை உடையதாகக் காணப்படுகின்றது. நிலைகுத்தாக 3.4அடி வரையிலான உயரத்தைக் கொண்டுள்ளது. இவ்வடிவத்தின் தலைப் பகுதியானது நாகபாம்பு போன்ற

அமைப்பினை உடையது. இந்து மக்கள் தமது கடவுளுடன் தொடர்புடையதான கற்பாறை என வழிபடுகிறார்கள். இதனை இன்றைய காலத்தில் நாகதம்பிரான் என அழைகின்றனர். இதன் எதிரே இந்துக் கோயிலும் காணப்படுகின்றது. இவ்வளரும் கல்லினைசுற்றி உயரம் குறைந்த அளவிலான நீள்சதுர வடிவிலான சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் குறிப்பிடுகையில் இக்கல்லானது முன்பு மிகவும் சிறியதாக இருந்து ஒவ்வொரு வருடமும் வளர்ந்துகொண்டு வருகின்றது என்கின்றனர். இன்று நான்கு அடியாக காணப்படுகின்றது. இவ் வளரும் கல் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடமாக அமைகின்றது (நேர்காணல்: தசீந்தன், வயது-35).

## குதிரைலயம்

ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் தங்கள் தேவைகளுக்காகவும், வியாபாரத்திற்காகவும் நூற்றுக்கணக்கான குதிரைகளை அரேபியா, பேர்சியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளார்கள். இவற்றை பராமரிக்க நெடுந்தீவு சிறந்த இடமெனக்கருதி அங்கு பல கேணிகளையும், கிணறுகளையும், குதிரை லயங்களையும் அமைந்துள்ளனர். இங்குக் குதிரைகள் கட்டுவதற்காக அமைக்கபட்ட தூண்கள் இன்றும் நிமிர்ந்த நிலையில் உள்ளன. இவற்றை நோர்போல்க் சுவர்கள் என்கிறார்கள். நெடுந்தீவுக்குச் செல்வோரை அதிகளவில் கவரும் சுற்றுலா மையமாக இது காணப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் குதிரைகளை வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் இக்கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. அழிவடைந்த நிலையில் காணப்படுகின்ற இக்கட்டடம் 300 மீற்றர் நீளத்திலும் 50 மீற்றர் அகலத்திலும் அமைக்கப்பட்டதோடு குதிரைகளைப் பராமரிப்பதற்கான நிர்வாகக் கட்டடமும் அதனுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது. அத்துடன் கற்பாறைகளில் குதிரைகள் தண்ணீர் குடிப்பதற்கென அமைக்கப்பட்ட தொட்டிகளும் உள்ளன. தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் இது தொல்பொருட் சின்னமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஒல்லாந்தரால் குதிரைகள் கட்டுவதற்காக அமைக்கப்பட்ட பல தூண்கள் இன்றும் சாறாபிட்டியில் காணப்படுகின்றன. அவை பல நூற்றாண்டுகள் ஆயினும் முற்றாக அழிந்துவிடாது இன்றும் நிமிர்ந்த நிலையில் காட்சி அளிக்கின்றன. எனவே அதிகளவிலான குதிரைகளை வைத்திருந்தமையால் அவற்றைப் பராமரிக்கும் இடமாக இக்குதிரைலயம் காணப்பட்டுள்ளது (சிவநாயக மூர்த்தி, 2003:82).

## நீதிமன்றம்

நீதிமன்றக் கட்டடம் பிரித்தானிய காலத்தில் 1905ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் இது தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் நெடுந்தீவகப் பிரதேச நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இக்கட்டத் தொகுதியில் சிறைக்கூடம், நீதவான் இருப்பிடம் போன்ற பல கட்டடங்கள் காணப்பட்டதை அழிவடைந்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## நாற்பதடி மனிதனின் கால் பாதம்

நெடுந்தீவு மேற்கில் சாறாபிட்டி கற்பாறைகளின் மத்தியில் ஒரு பெரிய மனிதனின் பாதம் காணப்படுகின்றது. இது சாதாரண மனிதர்களின் பாதங்களை விடவும் மிகவும் பெரிதான கால் பாதமாகக் காணப்படுவதால் 40 அடி மனிதனின் கால் பாதம் எனக் கூறப்படுகின்றது. அத்துடன் இயற்கையாக தோன்றிய வடிவம் எனவும் இப்பாதம் இராமபிரானது பாதம் எனவும் குறிப்பிடுகின்றார்கள். இதனளவானது ஒரு

அடி அகலமும் இரண்டு அடி நீளமாகக் காணப்படுகின்றது. எந்தவிதமான பாதுகாப்பு வேலிகளுமற்ற நிலையில் காணப்படுகின்றது. முன்னைய காலத்தில் 40அடி மனிதன் வாழ்ந்ததாகவும் அவ்வாறான மனிதனின் கால் பாதமே இதுவென வாய்மொழிக் கதைகள் கூறுகின்றன. இவ்வகையில் இப்பாதமானது ஒரு கற்பாறையில் பாத வடிவில் காணப்படுவதினை அவதானிக்கலாம் (இலட்சுமணராசா, 2010:62-63).

### வழிபாட்டிடங்கள்

### சோழர் காலச் சிவன் கோயில்

இது சோழர்களால் கட்டப்பட்டது. இக்கோயிலின் முன்பகுதியானது பாரம்பரிய வரைபடங்கள் கலையம்சங்களைக்கொண்டு அரசபரம்பரையைச் சித்தரிப்பதாக காணப் பட்டது. சோழர் காலத்தில் இந்திய கலைப்படைப்புகளுடன் அமைத்தனர். இவ்வாலயம் 40அடி நீளமும் 10அடி அகலமும் கொண்டதாககாணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சுண்ணாம்புக் கல், சுதை என்பவற்றை பயன்படுத்திக் கட்டப்பட்ட இவ்வாலயம் மிகச்சிறிய கர்ப்பக்கிரகத்தையும் அந்தராளத்தையும் 24X15 அடி நீள அகலத்தில் முக மண்டபத்தையும் கொண்டுள்ளது. இவ்வாலயத்தின் கட்டட அமைப்பும் குறைந்த நீள அகலம் கொண்ட கர்ப்பகிரகம், அந்தராளம் என்பவற்றின் அமைப்பும் 10ஆம், 11ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்திலும் இலங்கையின் பொலன்னறுவையிலும் கட்டப்பட்ட சோழர்கால ஆலய அமைப்புக்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது.

ஆலயத்தின் உட்பகுதியில் சிதைவுண்டு காணப்படும் அந்தராளப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வின்போது கிடைத்த சிலைகள், புடைச்சிற்பங்கள், அலங்கார வேலைப்பாடுடைய கற்கள், சுடு மண்ணால் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனக் குழாய்கள் ஆலயத்தில் பயன்படுத்திய கோமுகி, சுற்றாடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராஜராஜசோழனின் பெயர் பொறித்த நாணயங்கள் என்பன ஆலயத்தின் பழமையைக் கண்டறிவதற்கு நம்பிக்கையான ஆதாரங்களாக உள்ளன. இவ்வாலயம் தொல்லியல் கூடத்தின் கீழ் தொல்லியல் மரபுரிமைச் சின்னமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது (புஸ்பரட்ணம், 2010: 48).

### புனித லோரன்ஸியார் ஆலயம்

குதிரை லயத்திற்கு அண்மித்த தூரத்தில் இத்தேவாலயம்அமைந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் இத்தேவாலயம் அமைக்கப்பட்டதாகவும் 16ஆம் நூற்றாண்டில் இத்தேவாலயம் இருக்கும் இடத்தில் ஒரு சிலுவை மட்டுமே காணப்பட்டதாகவும் வாய்மொழிக் கதைகள் குறிப்பிடுகின்றன. இக்கருத்தை இந்தியாவிற்கும் நெடுந்தீவிற்கும் இடையில் உள்ள இந்துசமுத்திரத்தில் ஒல்லாந்த கப்பல் ஒன்று மூழ்கிப் போனதால் அக்கப்பலின் தலைவன் தப்பி நெடுந்தீவின் மேற்குக் கரையோரம் கரை சேர்ந்ததாகவும் தன்னுயிரைக் காத்த தேவனுக்கு நன்றி செலுத்தும்வகையில் ஒரு சிலுவை மரத்தை நட்டியதாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் உள்ளன. பழமை வாய்ந்த இந்தத் தேவாலயம் தீவின் தென்மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இது முஸ்லிம் பள்ளிவாசலாக இருந்து பின்னர் போர்த்துக் கேயரால் கத்தோலிக்கத் தேவாலயமாக மாற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது. புனித லோன்சியார் கோவில் அமைந்துள்ள வளவு பள்ளிவாசல் தொம்பு என்றே இன்றும் சொல்லப்படுகின்றது.

### பொழுதுபோக்குச் சுற்றுலாத் தளங்கள்

மாவலித்துறைக்கடற்கரை:வடமாகாண கடற்கரைகள் சூரிய குளியல், படகுச் சவாரி மற்றும் சமுத்திர நீர் புகைப்பட காட்சிக்கு ஏற்றதான அம்சங்களைக் கொண்டுள்ளன.

இம்மாவலி கடற்கரையானது நெடுந்தீவின் முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை சிறிது மாறுபடாத அளவுடன் காட்சி அளிக்கின்றது. இங்கே வெள்ளை மணல், நீலக்கடல் அதிஉப்புத்தன்மை வாய்ந்தனையாகவும், நீச்சலுக்கு ஏற்றதாயும் காணப்படுகின்றது. நெடுந்தீவின் மிக முக்கிய கடற்கரையாக இது காணப்படுகின்றது. இது நெடுந்தீவின் மத்தியில் வடகரையில் அமைந்துள்ளது. வெண்மணற் பரப்பான கடற்கரை நீளத்திற்குப் பரந்து காணப்படுகின்றது. இது கற்பாறைகள் அற்றதாயும் குளிப்பதற்கும், நீந்துவதற்கும் இதமானதாயும் அமைந்துள்ளது. இதன் அருகே பல நன்னீர் கிணறுகளும் கட்டப்பட்டுள்ளன. இதற்கு அருகில் ஒல்லாந்தர் கோட்டையும் அமைந்திருக்கின்றது. இக்கடற்கரையானது சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கவரும் இடமாயுள்ளது.

**பவளக்கடற்கரை:** இக்கடற்கரையானது நெடுந்தீவின் சுற்றுலாவிற்குப் பிரசித்தமான கடற்கரையாகக் காணப்படுகின்றது. மாசி மாதத்தில் இருந்து ஐப்பசி மாதம் வரையிலான காலப்பகுதியில் மிகவும் சிறப்பானதாகக் காணப்படும். இக்கடலினுள் வியப்புக்குள்ளாக்கும் வகையிலான முருங்கைகற்பாறை வடிவமைப்புக்கள் காணப்படுவதாக நீர்மூழ்கி ஆய்வாளர்கள் ஆய்வு செய்து குறிப்பிட்டுள்ளார்கள் (வட மாகாண சுற்றுலா வள மதிப்பீட்டு அறிக்கை, 2016). கடற்கரையானது குளிப்பதற்கு ஏற்றதல்ல இப்பகுதி அதிக அளவில் முருங்கைக் கற்பாறைகளால் நிரம்பிக் காணப்படுகின்றது. இதன் கரையோரங்களில் காற்றாழைத் தாவரங்கள் பரம்பியுள்ளது. இது பார்ப்பதற்கு இரம்மியமான காட்சியாய் அமைந்துள்ளது. அதிகளவிலான முருங்கை கற்பாறைகள் நிறைந்த கடற்கரையாகும்.

## முடிவுரை

நெடுந்தீவானது யாழ்குடாநாட்டின் சப்த தீவுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அத்தோடு வட இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிருவாக, வர்த்தக மையமாகவும் காணப்படுகின்றது. மேலும் அமைவிடக் காரணிகளாலும் பௌதீகச் செல்வாக்கினாலும் புராதன காலம் தொடக்கம் இன்றுவரை மக்கள் வாழ்ந்துவரும் தீவாகக் காணப்படுகிறது. இதனால்தான் நெடுந்தீவானது நீண்டதீவு மட்டுமல்ல அதற்கொரு நீண்ட பாரம்பரிய வரலாற்றையும் கொண்டுள்ளது என்பதனை அங்கு சிதைவுறும் நிலையில் காணப்படும் தொல்லியல் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. நெடுந்தீவு குறித்து ஆவணப்படுத்தப்பட்ட இலக்கிய படைப்புகளும், குறிப்பாக தொல்லியலாய்வுகளும் மட்டுப்படுத்தப் பட்டதாகவே காணப்படுகின்றது. இவற்றை உள்ளடக்கி உதிரியான ஆய்வுகள் மேற்கொண்ட போதிலும் சுற்றலாத்துறை சார்ந்த ஆவணப்படுத்தல் ஆய்வின் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

நெடுந்தீவகப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து விதமான சுற்றுலாத் தளங்களும் மக்களால் விரும்பப்படும் இடங்களாகக் காணப்படுகின்றன. இவை இயற்கையழகு மிக்கதாகக் காணப்பட்டாலும் அவை இன்றும் உலகளவில் அறியப்படாத நிலையில் காணப்படுகின்றது. இவ்விடத்தின் வரலாற்றினை யாவரும் அறியக்கூடிய விதத்தில் சுற்றுலாவின் மூலம் உலகிற்கு அறிமுகப்படுத்துவதன் ஊடாக மாவட்டத்தின் அபிவிருத்தி நிலையினை மேம்படுத்துவதுடன் நெடுந்தீவின் பிரதேச அபிவிருத்திக்கு வழிகோலுவதாக அமையும். சுற்றுலா விருத்திற்கேற்றதான வகையில் அங்கு காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து, சுகாதாரம், நிதியியல் சேவைகள், வர்த்தகச் செயற்பாடுகள்

என அனைத்தையும் முன்னேற்றுவதன் மூலம் சுற்றுலாத்துறையின் விருத்திக்கு வழிவகுக்கும்.

நெடுந்தீவில் சூழல்சார் மற்றும் வரலாறு சார்பான சுற்றுலாத் தளங்கள் முறையான பராமரிப்பு இன்மையினால், தொல்லியல் சார் புனர்நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினாலும் அதன் தனிச்சிறப்பு மக்கள் மத்தியில் நலிவடைவது மட்டுமன்றி, நாளுக்கு நாள் அழிவடைந்து செல்கின்ற போக்கும் காணப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் ஏனைய சுற்றுலா மையங்களின் அபிவிருத்தியினைப் போன்று இப்பிரதேச சுற்றுலா மையங்களும் விருத்தி செய்யப்படுவதன் மூலம் அன்னியச் செலாவணியை அதிகரித்துப் பொருளாதார விருத்திக்கு வழிவகுக்கும்.

### பரிந்துரைகள்

- நெடுந்தீவிலுள்ள தொல்லியற் சான்றுகள் உரிய முறையில் பராமரித்து புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- நெடுந்தீவில் சுற்றுலாத்துறை விருத்திக் கேற்ற வகையில் போக்குவரத்து, உட் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்ய வேண்டும்.
- இலங்கையிலுள்ள ஏனைய சுற்றுலாத் தளங்களைப் போன்று நெடுந்தீவுப் பிரதேசத்தினையும் கலாசார, வரலாற்றுச் சுற்றுலாத்தளமாக மாற்றுதல் வேண்டும்.
- வரலாற்றுச் சின்னங்களை முறையாகக் கையாளும் வகையில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும்.
- சுற்றுலா மையங்களை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகைகளைக் காட்சிப்படுத்த வேண்டும்.

### உசாத்துணைகள்

#### நூல்கள்

1. குகபாலன், கா.(1994). தீவகம் வளமும் வாழ்வும். தீவகக் கோட்டக் கூட்டுறவு ஒன்றியம். யாழ்ப்பாணம்.
2. குகபாலன்,கா.(2000). தீவகம் பல்துறை நோக்கு. புவியியல்துறை. யாழ்ப்பாண பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.
3. சதாசிவம், சே.(1979).சப்த தீவுகள். ஏசியன் அச்சகம். சென்னை.
4. சிவநாயகமூர்த்தி,க.(2003). நெடுந்தீவு மக்களும் வரலாறும். விவேகா அச்சகம் ரொறொன்டோ. கனடா.
5. புஸ்பரட்ணம்,ப.(2010).நெடுந்தீவில் சுற்றுலாவிற்குரிய தொல்லியல் சின்னங்கள். வரலாற்று உலா.(ப.ஆ).நடராசா,ஆ.சி. சிவத்தமிழ் மானிட விடியற்கழகம்.
6. இலட்சுமணன்,ந.(2010).நெடுந்தீவு சிதையும் சின்னங்கள். கங்கை பிறிண்டேர்ஸ். யாழ்ப்பாணம்.

#### நேர்காணல்கள்

1. அன்ரன் ஜெயலஜ்ரீன், ஜோ. சுற்றுலாப் பயண வழிகாட்டி. வயது-39. நெடுந்தீவு.
2. கமலாவதி, நா. ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரியர். வயது- 85. நெடுந்தீவு.
3. சுஜீவன். ஜோ. வாகன சாரதி.வயது-40. நெடுந்தீவு.
4. தாவீது, ஜெ. அருட்பணி (தென்னிந்திய திருச்சபை). வயது-51. யாழ்ப்பாணம்.
5. தசீந்தன்.ச.பாதுகாப்பு அதிகாரி, தொல்லியல் திணைக்களம், வயது-35, யாழ்ப்பாணம்.
6. நெடுந்தீவிலுள்ள சுற்றுலாத் தளங்கள் பற்றிய நிழற்படங்கள்.